அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

EA.129/2013 in EP.No.79/2007

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.P.காயத்திரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எ.சா.1 | 25.08.2025 |
| பெயர் சுந்தரபாபு | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. நான் இந்த மனுவில் 2ம் ஆட்சேபனையாளர் என்றால் சரிதான். நான் கிரையசொத்தை 1997 வருடத்தில் வாங்கினேன். நான் சொத்தை விஜயலட்சுமி சபேசன் (5ம் தீர்ப்பு கடனாளி) என்பவரிடம் சொத்தை பெற்றேன். நான் மனுதாரர் மீது அசல் வழக்கு எண் 458/2012 என்ற வழக்கை தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆனது என்றால் வழக்கு தாக்கல் செய்தேன் வழக்கு முடிவு விவரம் தெரியாது. நான் 1996 தாக்கல் செய்த வழக்கு காலத்திற்கு பின்பு சொத்தை 1997ல் கிரையம் பெற்றதால் அதன் தீர்ப்பு படி 5ம் தீர்ப்பு கடனாளி கட்டுபடுகிறார் என்றாலும் எனவே நானும் அசல் வழக்கின் தீர்ப்பிற்கு கட்டுப்படவேண்டும் என்றாலும் நான் கிரையம் பெற்ற சொத்திற்கு மேற்கூறிய வழக்கு சொத்திற்கும் சம்மந்தம்

இல்லை.

2. தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றும் போது நான் எந்த இடையுரும் செய்யகூடாது என்றால் என்னுடைய சொத்தின் எல்லைக்கும் மனுதாரர் சொத்தின் எல்லைக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளது. இந்த மனு அனுமதிக்கப்பட்டு காலிசுவாதினத்தை மனுதாரருக்கு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.